## மக்கள் தொகை பெருக்கம் மட்டுமே இந்தியாவின் பொருளாதாரத்தை வலுப்படுத்த போதுமானதாகாது: மூடிஸ் கணிப்பு



இந்தியாவில் அதிகரித்துவரும் மக்கள் தொகை தொழிலாளர் பங்களிப்பை அதிகரிக்கும் என்றாலும்கூட அதுமட்டுமே பொருளாதாரத்தை வலுவானதாக்கிவிட போதுமானதாக இருக்காது. அதற்கு இங்குள்ள கற்றல் விளைவின் தரமும் ஒரு காரணமாகும் என்று கடன்தர நிர்ணய நிறுவனமான மூடிஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும், கல்வித்தரத்தை மேம்படுத்துவது இந்தியா போன்ற நாடுகள் டிஜிட்டல்மயமாக்கல் மற்றும் செயற்கை நுண்ணறிவு வளர்ச்சியால் வேலையிழப்புக்கு உள்ளாவதைத் தவிர்த்துக் கொள்ள இயலும். குறிப்பாக பிபிஓ, கால் சென்டர்கள் போன்ற சேவை மையங்களிலும் வேலையிழப்பைத் தவிர்க்கலாம். இப்போதைக்கு இந்தியாவின் கற்றல் விளைவின் தரம் பாகிஸ்தான், வங்கதேசத்தில் உள்ளதுபோல்தான் இருக்கிறது என்றும் தெரிவித்துள்ளது.

இத்தகவல்களை **Population growth alone will not drive credit benefits for emerging economies** என்ற தலைப்பிலான அறிக்கையில் மூடிஸ் வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் அதிகரித்துவரும் மக்கள் தொகையால் நாட்டில் உழைக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இதனால் பொருளாதார வளர்ச்சி ஏற்படும். ஆனால், இதுமட்டுமே பொருளாதாரத்தை வலிமையாக்குவதுடன், நிதிப் பலன்களையும் பெருகச் செய்துவிடாது. வலிமையான பொருளாதாரத்துக்கு வலிமையான கல்விக் கட்டமைப்பு, தரமான உட்கட்டமைப்பு ஆகியனவும் அவசியம்.

கல்வித் தரத்தில் சீனாவுடன் ஒப்பிடுகையில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசத்தில் மிகப்பெரிய இடைவெளி நிலவுகிறது.

அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியா, வங்கதேசம், இந்தோனேசியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், வியட்நாம் ஆகிய நாடுகளில் பணிபுரியும் வயதில் உள்ளோரின் எண்ணிக்கை 40 சதவீதம் அதிகரிக்கும். இந்தச் சூழலில் இந்நாடுகள் கல்வித் தரம், உள்கட்டமைப்பு மேம்பாட்டில் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

இந்தியா, வங்கதேசத்தில் மேல்நிலைப்பளிப் படிப்பை முடித்த ஆண்கள், பெண்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு திருவிழா மூலம் நாடு முழுவதும் 51 ஆயிரம் பேருக்கு பணி நியமன ஆணை: பிரதமர் மோடி வழங்கினார்



**புதுடெல்லி:** வேலைவாய்ப்பு திருவிழா மூலம் நாடு முழுவதும் 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை பிரதமர் நரேந்திர மோடி காணொலி மூலம் நேற்று வழங்கினார்.

நாடு முழுவதும் மத்திய அரசின் பல்வேறு துறைகளில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புமாறு, உயர் அதிகாரிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு உத்தரவிட்டார். இதன்படி, ஒன்றரை ஆண்டில் 10 லட்சம் பேருக்கு மத்திய அரசு வேலை வழங்க வகை செய்யும் வேலை வாய்ப்பு திருவிழாவை (ரோஜ்கார் மேளா) பிரதமர் மோடி கடந்த ஆண்டு அக்டோபரில் தொடங்கி வைத்தார். இதன்படி மாதந்தோறும் ஆயிரக்கணக்கானோருக்கு அவர் பணி நியமன ஆணைகளை காணொலி மூலம் வழங்கி வருகிறார்.

இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு, மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் சார்பில் 45 நகரங்களில் வேலை வாய்ப்பு திருவிழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மத்திய உள் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் மத்திய ஆயுதப்படைப் பிரிவு (சிஎபிஎப்) பணிக்கு தேர்வான 51 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு பிரதமர் மோடி காணொலி மூலம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இவர்கள் சிஆர்பிஎப், பிஎஸ்எப், சஷாஸ்திர சீமா பால் (எஸ்எஸ்பி), அசாம் ரைபிள்ஸ், சிஐஎஸ்எப், ஐடிபிபி, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு மற்றும் டெல்லி போலீஸ் உள்ளிட்டவற்றில் காவலர் (ஜெனரல் டூட்டி), உதவி ஆய்வாளர் உட்பட பல்வேறு பதவிகளில் பணியில் சேர உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் பிரதமர் மோடி காணொலி மூலம் பேசியதாவது:

இளைஞர்கள் நாட்டுக்கு சேவை செய்ய விரும்புகிறார்கள். அந்த வகையில் இன்று பணி நியமன ஆணைகளை பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். இவர்கள் நாட்டுக்காக பணியாற்றுவதுடன் நாட்டு மக்களின் பாதுகாவலர்களாகவும் செயல்படுவார்கள்.

இளைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காக துணை ராணுவப் படைக்கான ஆட்கள் தேர்வு நடைமுறையில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக, விண்ணப்பங்களை பரிசீலனை செய்வது முதல் இறுதித் தேர்வு வரையிலான பணிகள் விரைவுபடுத்தப்பட்டு உள்ளன. இதற்கான தேர்வுகள் முன்பு இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே நடைபெற்ற நிலையில் இப்போது 13 உள்ளூர் மொழிகளில் நடத்தப் படுகின்றன.


எல்லைப் பகுதி மற்றும் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சிறப்பு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சத்தீஸ்கரில் நக்சல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக் கானவர்கள் இன்று பணி ஆணை களை பெற்றுள்ளனர்.

உத்தரபிரதேசம் ஒரு காலத்தில் குற்றச் செயல்களுக்கு பெயர் பெற்று விளங்கியது. ஆனால் அங்கு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்ட பிறகு இன்று முதலீட்டுக்கு பெயர் பெற்று விளங்குகிறது.

அடுத்த சில ஆண்டுகளில் உலகின் முதல் மூன்று பெரிய பொருளாதார நாடுகள் பட்டியலில் இந்தியா இடம்பெறும்.
மருந்து உற்பத்தித் துறை வேகமாக வளர்ந்து வருகிறது. இதன் மூலம் வரும் காலங்களில் ஏராளமான வேலைவாய்ப்பு உருவாகும். வாகன உற்பத்தித் துறையும் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்த இரு துறைகளும் வரும் காலத்தில் மேலும் வளரும்.

வரும் 2030-க்குள் இந்திய பொருளாதாரத்தில் சுற்றுலா துறையின் பங்கு ரூ.20 லட்சம் கோடியாக அதிகரிக்கும். இத்துறை இளைஞர்களுக்கு 13 கோடி முதல் 14 கோடி புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்க ‘மேக் இன் இந்தியா' உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் இந்தியாவில் லேப்டாப் மற்றும் கம்ப்யூட்டர்கள் உற்பத்தியை அதிகரிப்பதற்காக மத்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதன் மூலம் உள்நாட்டு வேலைவாய்ப்பும் கணிசமாக அதிகரிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்

## சூரியனை ஆய்வு செய்வதற்காக செப்.2-ல் விண்ணில் பாய்கிறது ஆதித்யா-எல்1: மக்கள் நேரில் பார்க்க ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோ ஏற்பாடு


பிரதிநிதித்துவப் படம்

**பெங்களூரு:** சூரியனை ஆய்வு செய்வதற்காக இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) உள்நாட்டு தொழில்நுட்பத்தில் உருவாக்கியுள்ள ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள், ஆந்திர மாநிலம் □ஹரிகோட்டாவில் இருந்து பிஎஸ்எல்வி-எக்ஸ்எல் ராக்கெட் மூலம் செப்.2-ம் தேதி விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் கடந்த 23-ம் தேதி நிலவின் தென்துருவப் பகுதியில் வெற்றிகரமாக தரையிறங்கி வரலாற்று சாதனை படைத்துள்ளது. லேண்டர் கலன், இறங்கிய இடத்தில் இருந்தபடியும், அதில் இருந்து வெளியே கொண்டு வரப்பட்ட ரோவர் வாகனம், ஊர்ந்து சென்றபடியும் நிலவில் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு வருகின்றன.

இதற்கிடையே, சூரியன் குறித்த ஆராய்ச்சியில் இஸ்ரோ தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

சூரியன் - பூமி இடையே ‘லெக்ராஞ்சியன்’ எனப்படும் 5 சமநிலை புள்ளிகள் உள்ளன. இந்த புள்ளிகளில் நிலைநிறுத்தப்படும் பொருட்கள் எவ்வித பாதிப்புக்கும் உள்ளாகாது. இதன்படி லெக்ராஞ்சியன் புள்ளி 1 (எல்1)பகுதியில் அமெரிக்காவின் நாசா விண்வெளி மையமும், ஐரோப்பிய விண்வெளி மையமும் இணைந்து கடந்த 1996 முதல் சூரியனை ஆய்வுசெய்து வருகின்றன. இதற்காக நாசாசார்பில் எல்-1 பகுதியில் செயற்கைக்கோள் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

சூரியன் குறித்த ஆராய்ச்சியில் ஈடுபட இஸ்ரோ விஞ்ஞானிகள் கடந்த 15 ஆண்டுகளாக தீவிர முயற்சி மேற்கொண்டு வந்தனர். இதன் பலனாக இஸ்ரோ சார்பில் சூரியனை ஆய்வுசெய்ய ஆதித்யா-எல்1 என்ற அதிநவீன செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டுள்ளது. இது எல்-1 பகுதியில் நிலைநிறுத்தப்பட உள்ளது.

இதுதொடர்பாக இஸ்ரோ நேற்று வெளியிட்ட அறிவிப்பில், ‘சூரியனை ஆய்வு செய்வதற்காக ஆதித்யா எல்-1 செயற்கைக்கோள், ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் இருந்து பிஎஸ்எல்வி-எக்ஸ்எல் ராக்கெட் மூலம் செப்.2-ம் தேதி காலை 11.50 மணிக்கு விண்ணில் செலுத்தப்படும். இதை நேரில் பார்வையிட https://lvg.shar.gov.in/VSCREGISTRATION/index.jsp என்ற இணையத்தில் பொதுமக்கள் முன்பதிவு செய்து கொள்ளலாம்’ என்று கூறப்பட்டுள்ளது.

**7 நவீன ஆய்வு கருவிகள்:** சூரியனை பற்றி ஆய்வு செய்ய உள்நாட்டு தொழில்நுட்பத்தில் ரூ.424 கோடியில் ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் தயாரிக்கப்பட்டுள்ளது. இதில் விஇஎல்சி (Visible Emission Line Coronagraph) என்ற தொலைநோக்கி, எஸ்யுஐடி (Solar Ultraviolet Imaging Telescope) என்ற தொலைநோக்கி, ஏ-ஸ்பெக்ஸ் (Aditya Solar wind Particle Experiment) என்ற சூரிய காற்றின் தன்மைகளை ஆய்வு செய்யும் கருவி, சூரிய சக்தியை ஆராயும் பிஏபிஏ (Plasma Analyser Package for Aditya), சூரியனின் எக்ஸ்ரே கதிர்கள், வெப்பத்தை கண்காணிக்கும் சோலெக்ஸ் (Solar Low Energy X-ray Spectrometer), சூரியனின் வெளிப்புற அடுக்குகளில் ஏற்படும் மாற்றங்களை ஆராயும் ஹெல் 10எஸ் (High Energy L1 Orbiting X-ray Spectrometer), கிரகங்களுக்கு இடையிலான காந்தப்புல தன்மையை அளவிடும் மேக்னோமீட்டர் ஆகிய 7 முக்கிய கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இதில் 4 கருவிகள் சூரியனை நேரடியாக ஆய்வு செய்யும். 3 கருவிகள் சூரியனின் வெளிப்பகுதி, துகள்கள், எல்-1 பகுதி உள்ளிட்டவற்றை ஆய்வு செய்யும்.

பூமியில் இருந்து 15 லட்சம் கி.மீ.தொலைவில் எல்-1 பகுதி உள்ளது. இந்த பகுதியை ஆதித்யா-எல்1 செயற்கைக்கோள் சென்றடைய 4 மாதங்கள் வரை ஆகலாம்.

இதன் ஆயுள்காலம் 5 ஆண்டுகள். அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு அடுத்து, இந்தியாவின் செயற்கைக்கோள் சூரியனை நோக்கி நெருங்கி செல்வது மைல் கல் சாதனையாக இருக்கும் என்றுஇஸ்ரோ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

**நிலவில் 4 மீட்டர் பள்ளம்.. பாதையை மாற்றியது ரோவர்**

மேடு, பள்ளம் நிறைந்துள்ள நிலவின் தென்துருவப் பகுதியில் வலம் வரும் பிரக்யான் ரோவர் வாகனம், தனது கேமரா கண்களால் பார்த்து நிதானமாக நகர்ந்து செல்கிறது. இந்த கேமராவால் 5 மீட்டர் தொலைவு வரை தெளிவாக பார்க்க முடியும்.

இந்நிலையில், ரோவர் சென்ற பாதையில் சுமார் 4 மீட்டர் (13 அடி) விட்டம் கொண்ட பள்ளம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. முன்னெச்சரிக்கையாக, பள்ளத்தை தவிர்த்து பாதுகாப்பான பாதையில் ரோவர் நகர்த்தப்பட்டது. இதுகுறித்து சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் கூறும்போது, ‘‘நிலவின் தென்துருவப் பகுதியில் பிரக்யான் ரோவரை நகர்த்தும்போது பல்வேறு சவால்கள் எழுகின்றன. எனவே, ரோவரின் கேமரா பதிவுகளை பார்த்து, அதற்கேற்ப செயல்படுகிறோம்’’ என்றார்.

## 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் 10 லட்சம் பெண் தொழில்முனைவோரை உருவாக்க திட்டம்: நீதா அம்பானி




**மும்பை:** அடுத்த 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் 10 லட்சம் பெண் தொழில்முனைவோர் உருவாக்கப்படுவர் என்றும் ரிலையன்ஸ்

ஃபவுண்டேஷனும், தி கேட்ஸ் ஃபவுண்டேஷனும் இணைந்து இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் நீதா அம்பானி தெரிவித்துள்ளார்.

ரிலையன்ஸ் நிறுவனத்தின் 46-ஆவது ஆண்டு பொதுக் கூட்டம் மும்பையில் இன்று கூடியது. இதில் பங்கேற்றுப் பேசிய ரிலையன்ஸ் ஃபவுண்டேஷன் நிறுவனத் தலைவர் நீதா அம்பானி, "பில் மற்றும் மிலிண்டா கேட்ஸ் ஃபவுண்டேஷனுடன் இணைந்து சிறப்பு திட்டம் ஒன்றை நாங்கள் தொடங்கி உள்ளோம். இந்த திட்டத்தின் கீழ் அடுத்த 3 ஆண்டுகளுக்குள் நாடு முழுவதும் 10 லட்சம் பெண் தொழில்முனைவோர் உருவாக்கப்படுவார்கள். குறைந்தபட்சம் ஆண்டு வருமானமாக ரூ.1 லட்சம் ஈட்டக்கூடிய வகையில் அவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும்" என்று தெரிவித்தார்.

இதனிடையே, செய்தியாளர்களிடம் பேசிய பில் கேட்ஸ், "கேட்ஸ் ஃபவுண்டேஷன் கடந்த 20 ஆண்டுகளாக இந்தியாவில் செயல்பட்டு வருகிறது. நான் இந்தியா வரும் ஒவ்வொரு முறையும், சுகாதாரத்திலும், வளர்ச்சியிலும் நாடு அடைந்து வரும் முன்னேற்றத்தைக் கண்டு வியக்கிறேன். பொருளாதார கட்டுப்பாடுகள் உள்ள போதிலும், இந்தியா போலியோவை ஒழித்திருக்கிறது; வறுமையைக் குறைத்திருக்கிறது; ஹெச்ஐவி பரவலும், குழந்தை இறப்பும் குறைந்திருக்கின்றன. சுகாதாரமும் நிதி சேவையும் மேம்பட்டுள்ளது.

இந்தியாவில் ஏற்பட்டுள்ள அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி வியக்க வைப்பதோடு, இவை தேவையான மக்களைச் சென்றடைந்திருப்பதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. பருவநிலை மாற்றம், பெண்களுக்கான பொருளாதார மேம்பாடு, ஏழைகளின் ஆரோக்கிய மேம்பாடு ஆகியவற்றுக்காக இயங்கி வரும் எங்கள் ஃபவுண்டேஷனுடன் ரிலையன்ஸ் ஃபவுண்டேஷன் இணைந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. அடுத்த 3 ஆண்டுகளில் 10 லட்சம் பெண்கள், சுய உதவிக் குழுக்கள் மூலம் தங்கள் திறனை வெளிப்படுத்த நாங்கள் உதவ இருக்கிறோம்" என தெரிவித்தார்.

EVA STALIN IAS ACADEMY